**அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் கட்டம் 2 - 2022**

-----------------------------------------------------------------------------------------

அநுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் செயற்திட்டம் கட்டம் 2 இன் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் (JICA) இடையில் கைசாத்திடப்பட்ட 2016 நவம்பர் 17 ஆம் திகதிய எஸ்எல்-பி 115 ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் செயற்திட்ட விஞ்ஞாபனத்தின் 18 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

செயற்திட்ட விஞ்ஞாபனம் மற்றும் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் நகர திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் மற்றும் அரச உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை (NWSDB) அமுலாக்கல் முகவராகவுள்ளது.

அநுராதபுர மாவட்டத்தில் நீர் வழங்கல் முறைமையை நிர்மாணிப்பதன் மூலம் பாதுகாப்பான குடிநீர் வழங்குதல் மற்றும் நீர் வழங்கல் மேவுகையை அதிகரித்தல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். நீர் சுத்திகரிப்பு ஆலை மற்றும் தொடர்புடைய வசதிகளின் நிர்மாணம், பரிமாற்ற மற்றும் விநியோக குழாய் வரிசைகளை வழங்கி நிர்மாணித்தல், செயற்பாடு மற்றும் பராமரிப்புக்கான உபகரணங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய பொருட்கள், ஆலோசனை சேவைகள் ஆகிய பெயரிலான 04 முக்கிய கூறுகளின் கீழ் செயற்திட்டத்தின் செயற்பாடுகள் அமுலப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 31,598 மில்லியனிற்கு சமமான யப்பான் யென் 27,301 மில்லியனானதுடன் அதில் ரூபா 26,778 மில்லியனிற்கு சமமான யப்பான் யென் 23,137 மில்லியன் யப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. மேலும், செயற்திட்டத்தின் மொத்தக் கிரயத்தில் ரூபா 22,464 மில்லியனிற்கு சமமான யப்பான் யென் 19,409 மில்லியன் ஒதுக்கீடு செயற்திட்ட நடவடிக்கைகளிற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த அதேநேரம் ரூபா 4,315 மில்லியனிற்கு சமமான யப்பான் யென் 3,728 மில்லியன் மிகுதி தொகை செயற்திட்டத்தின் கட்டம்-I நடவடிக்கைகளிற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. ரூபா 48.20 மில்லியனிற்கு சமமான யப்பான யென் 4,164 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் பங்களிக்கப்பட வேண்டும். செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2017 யூனில் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூன் அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

**1.3 அபிப்பிராயம்**

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடு/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டு நியம இல. 16 இன் 07 ஆம் பந்தியின் பிரகாரம் ஆதனம், பொறி மற்றும் உபகரண உருப்படியொன்றின் கிரயம் சொத்தாக இனங்காணப்பட வேண்டும். ரூபா 4.3 மில்லியன் கூட்டுமொத்த பெறுமதியான 15 தளபாட உருப்படிகள், 23 அலுவலக உபகரண உருப்படிகள் மற்றும் 33 கணனிகள் மேற்படி தேவைப்பாட்டிற்கு முரணாக நடைமுறை வேலையாக பதிவு செய்யப்பட்டுள்ளது. | 2023 இறுதிக் கணக்குகளில் சீர்செய்தல் மேற்கொள்ளப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் 9.3 ஆம் பிரிவு | முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்திட்டங்களின் வழிநடாத்தல் குழுக் கூட்டம் குறைந்தபட்சம் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை நடாத்தப்பட வேண்டும். எனினும், 2017 முதல் 2022 திசெம்பர் 31 வரை ஒரு கூட்டமேனும் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | நிர்மாணம் மற்றும் செயற்திட்ட முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கு வழிநடாத்தல் குழுக் கூட்டம் நடாத்தப்படலாம். | விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. பௌதீக செயலாற்றல்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்**

| **இல.** | **செயற்திட்டக் கூறு** | **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவத்தின் பதில்** | **கணக்காய்வாளரின் பரிந்துரை** |
|---|---|---|---|---|
| (அ) | விரிவான வடிவமைப்பு மற்றும் கேள்வி உதவிக்கான ஆலோசனை ஒப்பந்தம் | ஆரம்ப ஆலோசனை ஒப்பந்தக் காலப்பகுதி 2018 மே 01 முதல் 2020 பெப்ரவரி 29 வரை 22 மாதங்களாக இருந்த போதிலும், அதன் பிரகாரம் செயற்திட்டத்தை வடிவமைப்பதற்கு ஏற்கனவே 44 மாதங்கள் எடுக்கப்பட்டிருந்ததுடன் தாமதமான காலப்பகுதி 22 மாதங்களாக இருந்தது. | நீர் வளமூல மாற்றம் காரணமாக, விரிவான வடிவமைப்பில் ஏறத்தாழ 18 மாதங்கள் தாமதமாகியது. 2019 ஏப்ரல் 21 இல் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல்கள் செயற்திட்டத்தின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தில் எதிர்பாராத தாமதத்தை ஏற்படுத்தியது. | செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | உள்ளீர்க்கும் வசதி, நீர் சுத்திகரிப்பு ஆலை, நீர் சேமிப்பு கட்டமைப்புக்கள், இயந்திரவியல், மின்சாரம் மற்றும் கட்டிடங்கள் ஆகியவற்றின் நிர்மாண வேலை (லொட் ஏ) | ஆரம்ப அமுல்ப்படுத்தல் திட்டத்தின் பிரகாரம் இந்த கூறுகளின் பணிகள் 2017 மார்ச்சில் தொடங்கப்பட்டு 2022 சனவரியில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது, எனினும் இது 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாணத்திற்கு முந்தைய செயன்முறையில் இருந்தது. | நீர் வழங்கல் அமைச்சின் அறிவுறுத்தலின் காரணமாக, நாட்டில் நிலவும் சிக்கலான சூழ்நிலையின் காரணமாகவும், JICA இன் நிதி மற்றும் ஒத்துழைப்பை மீண்டும் தொடங்கும் வரையும் கேள்வி சமர்ப்பிப்பு முடிவடையும் திகதி காலவரையின்றி நீடிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பரிமாற்ற மற்றும் விநியோக குழாய் வரிசைகளின் வழங்கல் மற்றும் நிர்மாணம் | ஆரம்ப அமுல்ப்படுத்தல் திட்டத்தின் பிரகாரம் பொதி இலக்கம் லொட் B, C1, C2 மற்றும் C3 ஆகியவற்றின் பணிகள் 2017 மார்ச்சில் தொடங்கப்பட்டு 2022 ஏப்ரலில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது, எனினும், இது 2022 திசெம்பர் 31 வரையிலும் நிர்மாணத்திற்கு முந்தைய செயன்முறையில் இருந்தது. | எனினும், 2022 ஏப்ரலில் இருந்து JICA பணவளிப்பு மற்றும் இணக்கப்பாடுகளை வழங்குதல் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டதாலும் நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்று ஒப்பந்தத்தை வழங்குவது தாமதமாகிறது. | செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஈ) | செயற்பாடு மற்றும் பராமரிப்புக்கான உபகரணங்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய ரொருட்கள் | திட்டச் செயன்முறையின் பிரகாரம் இந்தக் கூறு 2017 நவம்பர் 17 இல் தொடங்கப்பட்டு 2018 நவம்பர் 17 இல் பூர்த்திசெய்யப்பட வேண்டியிருந்த போதிலும் இது 2022 திசெம்பர் 31 வரையிலும் தொடங்கப்படவில்லை. | இச் செயற்திட்டத்தின் நிர்மாணக் கட்டம் இன்னும் தொடங்கப்படாததால் இந்த கட்டத்தில் இந்த வாகனங்கள் தேவைப்படவில்லை. | செயற்திட்டப் பணிகளை தாமதமின்றி தொடர்வதற்கு உதவும் வகையில் பெறுகை செயன்முறை பொருத்தமான காலப்பகுதியில் தொடங்கப்பட வேண்டும். |

## 3.2 சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| இந்த செயற்திட்டம் கெபித்திகொல்லாவ, பதவியா, ஹொரவபொத்தானை மற்றும் கஹட்டகஸ்திகிலிய பிரதேச செயலாளர் பிரதேசங்களை உள்ளடக்குகிறது, அங்கு மக்கள் பாதுகாப்பற்ற அசுத்தமான நிலத்தடி நீரை நம்பியிருக்கிறார்கள், இது பல் மற்றும் எலும்பு புளோரோசிஸை ஏற்படுத்துகிறது, அத்துடன் நீண்டகால சிறுநீரக நோயை பரப்புவதற்கான முக்கிய அபாயகரமான காரணிகளில் ஒன்றாகும். எனவே, பாதுகாப்பான குடிநீரை வழங்குவதற்காக இந்த நீர் வழங்கல் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்துள்ளதுடன் செயற்திட்டம் 2017 யூனில் தொடங்கி 2024 யூனில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிட்டது. 50,000 குடும்பங்கள் பயனாளிகளாக இலக்கிடப்பட்டிருந்ததுடன் பாதுகாப்பான குடிநீருக்காக காத்திருக்கின்றன. எனினும் இந்த செயற்திட்டத்தின் நிர்மாண ஒப்பந்தம் 66 மாதங்கள் கடந்த பின்னரும் இன்னும் வழங்கப்பட்டிருக்கவில்லை. இதன் விளைவாக, அனைத்து நடவடிக்கைகளும் பெறுகை செயன்முறையின் கீழ் இருந்தன, மேலும் இந்த சூழ்நிலையின் காரணமாக இறுதிப் பயனர்களுக்கு செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்படும் நன்மைகளை அடைந்துகொள்வதற்கான ஆபத்து உள்ளது. | JICA 2022 ஏப்ரல் முதல் அனைத்துப் பணவளிப்பையும் இணக்கப்பாட்டை வழங்குவதையும் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது, எனவே ஒப்பந்தத்தை வழங்குவதில் மேலதிக தாமதம் ஏற்படும் என எதிர்பார்க்கிறோம். | தற்போதுள்ள பிரச்சனைகளை தீர்த்து செயற்திட்ட நோக்கத்தை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |